Paper ID: IL02

# இலங்கையின் திருமணம் தொடர்பான சட்டங்களில் முஸ்லிம் சட்டத்தின் வகிபங்கு.

**க.றியாந்தினி**

கொழும்பு பல்கலைக்கழகம்,
மூன்றாம் வருடம்,
சட்ட பீடம்.
kanesriya@gmail,com

**ஆய்வுச் சுருக்கம்.**

இஸ்லாமிய சட்டக் கோட்பாடுகளையும் எமது நாட்டு கலாசார, சமூக மாற்றங்களையும் உள்வாங்கி தனியார் சட்டப் பரப்பில் தனக்கென்று ஒரு தனியிடம் கொண்டிருக்கும் சட்டமாக முஸ்லிம் சட்டம் திகழ்கின்றது. முஸ்லிம் சட்டமானது பிறப்பின் மூலமோ, மதமாற்றத்தின் மூலமோ இஸ்லாமிய நம்பிக்கையைக் கொண்ட அனைத்து முஸ்லிம்களுக்கும் ஏற்புடையதாகும். ஆரம்ப காலங்களில் முஸ்லிம் சட்டம் சம்பந்தமான விடயங்கள் மொகமதியன் கோவையினால் ஆளப்பட்ட போதும் காலப்போக்கில் இச் சட்டமானது நியதிச் சட்ட வடிவம் பெற்றது. இலங்கை பன்மைத்துவ கலாசாரம் கொண்ட நாடாகையால் அப் பன்மைத்துவமானது திருமணம் தொடர்பான சட்டங்களில் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. திருமணம் என்பது உணர்வுபூர்வமான ஒரு விடயமாகப் பார்க்கப்படுவதால் அதுதொடர்பான சட்டங்களை இயற்றும் போது சட்டவாக்கசபையானது ஒவ்வொரு சமூகத்தினதும் கலாசாரப் பெறுமானங்களைக் கருத்திற்கொண்டு அவற்றை ஏற்று அங்கீகரித்து சட்டவாக்கத்தினை மேற்கொண்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் இலங்கையில் திருமணம் தொடர்பான விடயங்களை கையாளுகின்ற மூன்று பிரதான நியதிச்சட்டங்கள் உள்ளன. நாட்டின் பொதுச்சட்டத்தின் கீழ் திருமண ஒப்பந்தமொன்றில் ஈடுபடுபவர் இல 19, 1907 ஆம் ஆண்டின் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யவேண்டும். கண்டியச் சட்டத்தினால் ஆளப்படுமொருவர் இல 44, 1952 ஆம் ஆண்டின் கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய திருமண ஒப்பந்தமொன்றில் ஈடுபடமுடியும். இச்சட்டத்தின் கீழ் இரண்டு கண்டிய திறத்தவர்களுக்கிடையிலான திருமணம் மட்டுமே செய்யமுடியும். அவ்வகையில் முஸ்லிம் ஒருவரின் விவாக, விவாகரத்து தொடர்பில் ஆளுகின்ற நியதிச் சட்டமாக முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டம் இல 13, 1951 என்பது காணப்படுகிறது. இந் நியதிச்சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் ஒருவர் வலிதான திருமண ஒப்பந்தமொன்றினுள் நுழைவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகளையும், அவை எவ்வாறு நாட்டின் பொதுச் சட்டத்தின் கீழான திருமண ஒப்பந்தமொன்றில் உள்நுழைவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து வேறுபடுகின்றன என்பதையும், திருமணம் தொடர்பில் நாட்டில் ஒருசீர்த்தன்மை கொண்ட சட்டமுறைமையினை ஏற்படுத்துவது சாத்தியமானதா என்பது பற்றியும், முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்திற்கு காலமாற்றத்திற்கு உகந்த வகையில் சில ஏற்பாடுகளை திருத்தியமைத்தல் தொடர்பில் பரிந்துரைகளையும் முன்வைக்கலாமென கருதுகிறேன்.

**திறவுச்சொற்கள் -** முஸ்லிம், திருமணம், சட்டம், திருக்குர்ஆன், திருத்தியமைத்தல்.

**ஆய்வுமுறை**

இவ்வாய்விற்காக இரண்டாம் தர மூலங்களான நூல்கள், சஞ்சிகைகள், திருக்குர்ஆன், பத்திரிகைகள், சர்வதேசச் சட்டங்கள், உள்நாட்டுச் சட்டங்கள், தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் இணையத்தள வளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

- இலங்கையின் திருமணம் தொடர்பான சட்டப்பரப்பில் முஸ்லிம் சட்டத்தின் கீழான திருமணங்களின் வகிபங்கினை ஆராய்தல்.
- பன்மைத்துவ சட்டங்களில் முஸ்லிம் சட்டத்தின் தனித்துவமும், திருமணம் தொடர்பான சில ஏற்பாடுகள் நாட்டின் பொதுச்சட்டத்திற்கு விதிவிலக்காகக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் ஆராய்தல்.
- காலமாற்றத்திற்கு ஏற்றவகையில் முஸ்லிம் சட்டத்தின் கீழான திருமணம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் சில சீர்திருத்த முன்மொழிவுகளை முன்வைத்தல்.

**விரிவான ஆய்வு முன்மொழிவு**

முஸ்லிம் திருமணம் என்பது ஒப்பந்தமாக உள்ள அதேவேளை அது சமய ரீதியான கடமையாகவும் காணப்படுகிறது.[xi] திருமண ஒப்பந்தமானது திறத்தவர்களிடையே பிணிக்கும்தன்மை வாய்ந்த உரிமைகளையும், கடப்பாடுகளையும் உருவாக்குவதோடு அதன்விளைவாக பிறக்கின்ற பிள்ளைகளுக்கு நெறிமுறைத்தன்மையினை அளிக்கிறது. அப் பரஸ்பர உரிமைகள், கடப்பாடுகள் என்பன திறத்தவர்கள் எப் பிரிவினைச் சார்ந்தவர்களோ அதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.[xii] எமது நீதிமன்றங்கள் இலங்கையைச் சேர்ந்த முஸ்லீம்கள் ஷாபி பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது.[xiii]

திருமணமொன்றிக்கான அடிப்படைத் தேவைப்பாடுகளை பின்வரும் அடிப்படையில் ஆராயலாமெனவுள்ளேன்.

- வயது
- தடுக்கப்பட்ட உறவுமுறை
- முன்னைய திருமணம் நிலைத்திருத்தல்
- திருமணப் பதிவு
- சம்மதம்

பொதுச்சட்டம் மற்றும் கண்டிய சட்டத்திற்கு 1995 இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் படி திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை பதினெட்டு ஆகும். இது தொடர்பாக அண்மைய வழக்கான Gunaratnam V. Registrar General [xiv] வழக்கில் ஆராயப்பட்டது. இவ்வழக்கில் நீதிமன்றம் பொது திருமண பதிவுச் சட்டத்தின் பிரிவு 15 இலங்கையினுடைய திருமணங்கள் தொடர்பான பூரண கட்டுப்பாட்டை பிரயோகிக்கின்றது. எந்தவொரு திருமணமும் பதினெட்டு வயதிற்கு கீழ் பெற்றோருடைய சம்மதத்துடனும் செய்யமுடியாது எனப்பட்டது.

முஸ்லிம் திருமணங்களை பொறுத்தவரையில் முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டம் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையை குறிப்பிடவில்லை. சிறுபராயத்தவர்களின்

திருமணங்கள் முஸ்லிம் சட்டத்தைப் பொறுத்தவரை வலிதான திருமணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. முஸ்லிம் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமுடைய ஆணொருவர் பருவமடைந்ததும் தனது சொந்த விருப்பில் திருமணம் செய்துகொள்ள முடியும்.[xv] Nawab Sadiq Ali Khan vs Jai Kishor[xvi] வழக்கில் ஒரு நபர் பதினைந்து வயதை அடைந்தவுடன் பருவமடைந்தவர் என்ற ஊகம் காணப்படும் எனப்பட்டது. முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பன்னிரண்டு வயதிற்கு குறைந்த முஸ்லிம் சிறுமியின் திருமணத்திற்கு காதியின் சம்மதம் தேவைப்படுத்தப்படுகிறது.[xvii]

பருவமடையாதவர்கள் அவர்களின் பாதுகாவலர்களின் மூலமாக திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடமுடியும். அத்திருமணம் வலிதாகக் காணப்பட்ட போதும் அதனை முடிவுறுத்துவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. பருவமடையாத முஸ்லிம் சிறுமியொருவருக்கு வலியின் சம்மதத்துடன் திருமணம் செய்துவைக்க முடியும். ஆயினும் அப்பெண் பருவ வயதை அடைந்ததும் அவ்வுறவிலிருந்து விடுபட **"Option of Puberty"** (khyar-ul-bulugh) எனும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தேர்வானது மனைவியால் மட்டுமே பிரயோகிக்கப்படமுடியும்.[xviii] ஷாபி சட்டத்தின் கீழ் பெண்களுக்கு இவ் உரிமை வழங்கப்படுவதில்லை. எனினும் Akeertamby Muheideenbawa V. Seylathumma[xix] எனும் வழக்கில் ஷாபி பிரிவைச் சேர்ந்த பெண்ணிற்கு காதியர் சபை இவ்வுரிமையை வழங்கியது. இதன்போது காதியர் சபை சிறுவர்களுக்கு திருமணம் செய்துவைப்பதனை சமூகத் தீங்காக குறிப்பீடு செய்ததுடன் அவை ஒழிக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தது. எனினும் இத் தீர்ப்பானது ஷாபி பிரிவை சேர்ந்த பெண்ணுக்கு Option of Puberty எனும் உரிமை கிடையாது அது ஹனபி சட்டக் கோட்பாடு என்ற அடிப்படையில் விமர்சிக்கப்பட்டது. எனவே ஷாபிப் பிரிவை பெரும்பான்மையாகக் கொண்ட எமது நாட்டில் இக்கோட்பாடு எதிர்வரும் காலங்களில் எவ்விதமாக வலுக்கொடுக்கப்படும் என்பது அவதானிக்கத்தக்கதாகும்.

முஸ்லிம் சட்டத்தில் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதினை குறிப்பீடு செய்யாமையானது நாட்டின் ஏனைய சட்டங்களுடன் முரண்படுவதனை நடைமுறையில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பாலியல் வல்லுறவுக்குற்றம் தொடர்பாக பதினாறு வயதிற்குட்பட்ட பெண்பிள்ளையுடன் அவளின் இணக்கத்துடன் உடலுறவு கொள்வதும் பாலியல் வல்லுறவுக் குற்றத்தினைப் புரிந்ததாகக் கொள்ளப்படும்.[xx] எனினும் அப்பெண்பிள்ளை பன்னிரண்டு வயதிற்கு குறையாத அவனது மனைவியாக இருக்கும் போது இப்பிரிவு ஏற்படையதாகாது எனப்படுகிறது. இவ் ஏற்பாடானது முஸ்லிம்களுக்கு உட்கிடையாக விதிவிலக்கினை வழங்குகின்றது. முஸ்லிம் சட்டத்தில் ஆகக் குறைந்த திருமண வயது குறிப்பீடு செய்யப்படவில்லை. எனவே முஸ்லிம் ஆணொருவர் பன்னிரு வயதிற்கு குறைந்த பெண் பிள்ளையினை திருமணம் செய்கின்ற போது அவர் நாட்டின் குற்றவியல் சட்டத்தின் கீழ் பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்கு குற்றம்சாட்டப்படமுடியும். இதுதொடர்பில் ஒரு முரண்பாடான நிலை காணப்படுகிறது.

தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் செய்யப்படும் திருமணங்கள் வலிதற்ற திருமணங்களாகக் கொள்ளப்படும். இரத்த உறவுமுறை அல்லது திருமண உறவுமுறை சம்மந்தமான சில உறவுகளில் திருமணம் செய்தல் சட்டத்தினால் தடுக்கப்பட்டுள்ளது. தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் திருமணம் செய்தலானது தண்டனைக்குரிய குற்றமாக இந் நியதிச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டனைச் சட்டக்கோவைக்கு (Penal Code) 1995 கொண்டுவரப்பட்ட திருத்தத்திற்கு அமைய முறையில்லாப் புணர்ச்சி(incest) தண்டனைக்குரிய குற்றமாகக் குறிப்பிடப்படுகிறது.[xxi] இதனடிப்படையில் இரத்த உறவுமுறைக்குள் அல்லது மகவேற்பின் மூலமாக அல்லது தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் இருவர்

பாலியலுறவு கொண்டால் ஏழு வருடத்திற்கு குறையாத இருபது வருடத்திற்கு மேற்படாத கடூழிய சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படலாம்.

தடுக்கப்பட்ட உறவுகளாக,

- ✓ திறத்தவர்களுள் ஒருவர் மற்றவரின் நேரடிச் சந்ததியாக இருத்தல்
- ✓ முழு அல்லது பாதிவழி சகோதரர்களுக்கு இடையிலான திருமணம்
- ✓ முழு அல்லது பின்சந்ததி வழியிலான பிள்ளைகள் அல்லது சகோதரர்களுடன் இடம்பெற்ற திருமணம்
- ✓ மனைவி அல்லது கணவனின் ஏனைய தாரத்தின் பிள்ளைகளுடனான திருமணம்
- ✓ மகன்/மகள், பேரன் /பேத்தி, தாய் /தந்தை அல்லது தாத்தா/பாட்டி ஆகியோருடைய விதவை அல்லது தாரமிழந்தவருக்கு இடையிலான திருமணம்

என்பவை தடுக்கப்பட்ட உறவுகளாக பொதுச்சட்டம் மற்றும் கண்டியச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முஸ்லிம் சட்டத்தில் இரத்தஉறவு, திருமண உறவுகளுக்கு மேலாக வளர்ப்பின் கூடாக ஏற்படும் உறவுகளையும் தடுக்கப்பட்ட உறவாகக் கருதுகின்றது. பால்கொடுத்த உறவுக்குள் திருமணம் செய்தால் அத்திருமணம் வெற்றானதாகும்.[xxii] முஸ்லிம் சட்டத்தின் கீழ் மனைவி உயிருடன் இருக்கும் போது மனைவியின் சகோதரியுடனான திருமணம் தடுக்கப்பட்டுள்ளது.[xxiii] மனைவியின் இறப்பின் பின் அல்லது விவாகரத்தின் பின் மனைவியின் சகோதரியை திருமணம் செய்தலானது சட்டத்தினால் தடுக்கப்படவில்லை. ஆனால் ஒரே நேரத்தில் இரு சகோதரிகளை திருமணம் செய்தலானது சட்டத்திற்கு முரணானது.[xxiv]

பொதுச்சட்டம்[xxv] மற்றும் கண்டியச் சட்டம்[xxvi] என்பவற்றில் முதல் திருமணம் நிலைத்திருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்யமுடியாது. எனினும் முஸ்லிம் ஒருவர் நான்கு மனைவிகளை திருமணம் செய்வதற்கான அனுமதியை திருக்குர்ஆன் வழங்குகிறது.[xxvii] நான்கு மனைவிகளின் மணம் சார் கடப்பாடுகளை பூர்த்திசெய்யத் தகுதியுடைய முஸ்லிம் ஆண் நான்கு வலிதான திருமண ஒப்பந்தங்களில் ஈடுபடமுடியும்.

முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டம் முஸ்லிம்களுக்கு இடையிலான திருமணங்களுக்கு மட்டுமே பிரயோகிக்கப்படுகிறது. கச்சிமுகமது எதிர் பெனடிட் வழக்கில் ஏற்கனவே திருமணமான இஸ்லாமியரொருவர் பொதுச் சட்டத்தின் கீழ் இஸ்லாமியரல்லாத பெண்ணை திருமணம் செய்தால் அத்திருமணம் வலிதற்றதாகும் எனக் கூறப்பட்டது. இவருக்கு தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் இருதாரமணத்திற்கு குற்றப்பொறுப்பு சுமத்தப்பட்டது.

பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்த ஆணொருவர் இஸ்லாமிய மதத்தை தழுவி இரண்டாவது திருமணம் செய்தமை வலிதானது என Reid vs AG[xxviii] வழக்கு தீர்க்கப்பட்டது. கோமறைக்கழகத்தினால் பன்மைத்துவ சமூகமொன்றில் மதமாற்றத்திற்கான உரிமை மட்டுப்படுத்தப்படமுடியாது எனும் அடிப்படையில் இவ்வழக்கு தீர்க்கப்பட்டிருந்தது. எனினும் கணவனுடைய ஒருதலைப்பட்சமான தீர்மானத்தினால் முதல் மனைவிக்கு ஏற்படப்போகின்ற அநீதி மற்றும் மதமாற்றத்தினுடைய விளைவுகள் என்பவை கவனத்திற்கொள்ளப்படவில்லை. இதனால் ஏனைய மதத்தவர்கள் போலியாக முஸ்லிம் மதத்தை தழுவி பல திருமணங்களைச் செய்யக்கூடிய வாய்ப்பாக இவ்வழக்குத் தீர்ப்பு அமைந்தது. அத்துடன் ஒருவர் தன்னுடைய மதத்தை மட்டுமன்றி முஸ்லிம் மதத்தையும் துஸ்பிரயோகம் செய்யும் நிலை உருவாகியது.

Abeysundera V. Abeysundera[xxix] வழக்கில் பொதுச் சட்டத்தின் கீழ் முதல் திருமணம் நிலைத்திருக்கும் போது இஸ்லாமிய மதத்தை தழுவி இரண்டாவது திருமணம் புரியப்படுமாயின் அது வெற்றும் வெறிதானதென நீதிமன்றம் விளம்பியது. கத்தோலிக்கரான அபேயசுந்தர 1958 இல் பொதுத் திருமணப் பதிவுச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்திருந்தார். பின்னர் எதிரிசிங்க என்பவருடன் நெருங்கிப் பழக ஆரம்பித்ததன் விளைவாக முதல் மனைவியிடமிருந்து விவாகரத்துக் கோரி 1980 இல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அது தோல்வியில் முடியவே இருவரும் முஸ்லிமாக மதம் மாறி முஸ்லிம் திருமண விவாகரத்து சட்டத்தின் கீழ் திருமணம் செய்தனர். இவ்வழக்கில் ஒருவர் தன் ஆள்சார் சட்டத்தை மாற்றிக்கொள்ள அங்கீகரிக்கப்படகின்ற போதிலும் ஏற்கனவே அவருக்கிருந்த சட்டக் கடப்பாடுகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டவராகப் பொருள் கொள்ளக்கூடாது எனப்பட்டது. ஆகவே ஒருவர் வெறுமனே திருமணம் செய்யும் நோக்கத்திற்காக மட்டும் மதம்மாறி உள்ளமையால் இருதாரக் குற்றம்புரிந்தார் என்ற அடிப்படையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டது. இதனால் போலியாக ஒருவர் மதம்மாறி பல திருமணங்கள் செய்வதற்கிருந்த சலுகை தடுக்கப்பட்டது. இதன் விளைவாக இஸ்லாமிய மார்க்கம் துஸ்பிரயோகம் செய்யப்படுவதற்கான வாய்ப்புத் தடுக்கப்பட்டது.

இலங்கையின் அரசியலமைப்பானது ஒருவர் தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக ஏற்று அங்கீகரித்துள்ளது.[xxx] ஒருவரின் மதச் சுதந்திரத்தின் விளைவாக ஒருவருக்கு கிடைக்கின்ற உரிமைகள், சலுகைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்ற மற்றுமொரு கோணத்திலும் இவ்வழக்குத் தீரப்பானது அவதானிக்கத்தக்கது. எனவே போலி மதமாற்றத்தை தடுப்பதுடன், உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் மதம்மாறுபவர்களின் மதச்சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

பொதுச்சட்டத்தினால் ஆளப்படுகின்ற ஒருவர் தன்னுடைய சட்ட ரீதியற்ற உறவை சட்ட ரீதியான உறவாக மாற்றவும், பொதுச்சட்டத்தின் கீழ் விவாகரத்தை பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்களிலிருந்து விடுபடவும் மதமாற்றத்தை ஒரு கருவியாகப் பாவிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதனை இலகுபடுத்துவதாக பல காரணிகள் உள்ளன. இஸ்லாமியராக மதம்மாறும் நடபடிமுறை இலகுவாக உள்ளதுடன், அவரின் மதமாற்றத்தின் உண்மைத்தன்மை பரிசீலிக்கப்படுவதில்லை. முஸ்லிம் திருமண விவாகரத்து சட்டத்தின் ஏற்பாடுகளின் படி இரண்டாவது அல்லது பின்னரான திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான நடபடிமுறையானது மிகவும் இலகுவானதொன்றாகும். பின்னரான திருமணம் செய்வது தொடர்பான அறிவித்தலை தனது பிரதேச எல்லைக்குள்ள ஒவ்வொரு ஜும்மா பள்ளிவாசல்களிலும், முதல்மனைவி மற்றும் பின்னரான திருமணம் செய்ய எண்ணியுள்ள மனைவியர் வசிக்கும் ஜும்மா பள்ளிவாசல்களிலும் காட்சிப்படுத்துவதற்கான அதிகாரமே சட்டத்தினால் காதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்னரான திருமண ஒப்பங்தங்களில் ஈடுபடும் போது தமது குடும்பத்தை பராமரிப்பதற்கான பொருளாதார வலிமை காணப்படுகின்றதா, முதல் மனைவி மற்றும் பிள்ளைகள் முறையாக பராமரிக்கப்படுகின்றார்களா, எல்லா மனைவியரும் சமமாக நடாத்தப்படுகின்றனரா என விசாரணை செய்தல் தொடர்பில் எவ்வித நியாயாதிக்கமும் சட்டத்தினால் காதிமார்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே பலதார மணம் தொடர்பில் இஸ்லாத்தில் எடுத்துரைக்கப்பட்ட உயரிய கொள்கைகள் உண்மையில் பின்பற்றப்படுகின்றனவா என அவதானிப்பதற்கு நடைமுறையில் எந்தவொரு அமைப்பும் இல்லை. இதன்காரணமாக ஒருவரின் மறுமணம் செய்வதற்கான ஒருதலைப்பட்சமான முடிவினால் பெண்கள், சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதனை நடைமுறையில் அவதானிக்கமுடிகிறது.

இஸ்லாமியரல்லாத ஒருவர் மதமாற்றத்தின் பின்னர் இரண்டாவது திருமணத்தில் ஈடுபடும் போது அவரின் மதமாற்றத்தின் உண்மைத்தன்மையை பரிசோதிப்பதற்கான ஒரு முறைமை ஒழுங்கமைக்கப்படவேண்டும். முறையாக தொழுகைகளில் ஈடுபடுகின்றாரா, சமய ரீதியான கடமைகளை முறையாக நிறைவேற்றுகின்றாரா என்பது அவதானிக்கப்படவேண்டும்.

மொறோக்கோவில் சட்டத்தின் பலதாரமணங்களை தடை செய்துள்ளதுடன் அது மனைவியருக்கு அநீதி இழைப்பதாகக் குறிப்பிடுகிறது.[xxxi] பாகிஸ்தானில் ஒருவர் பின்னரான திருமண ஒப்பந்தமொன்றில் ஈடுபடக் கருதுவராயின் அவர் அத் திருமணத்திற்கு முன்னர் நடுத்தீர்ப்பு சபையிடமிருந்து எழுத்தினாலான அனுமதியை பெறவேண்டும். அந்நபர் முன்மொழியப்பட்ட திருமணமானது அவசியமானதும், நியாயமானதும் என சபையினைத் திருப்திப்படுத்துவதுடன் உயிரோடிருக்கின்ற மனைவியின் சம்மதமும் தேவைப்படுத்தப்படுகிறது.[xxxii] இதனை பின்பற்றத் தவறுபவர் தண்டப்பணம் அல்லது மறியற்தண்டனை அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுவாரென சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு அனுமதி பெறப்படாது செய்யப்படும் திருமணமானது வலிதின்மையாக்கப்படாது.

ஷாபிச் சட்ட அறிஞர்கள் இத்தகைய சீர்திருத்தங்களானவை திருக்குர்ஆனுக்கு எதிரானது என விமர்சிக்கின்றனர். பலதாரமணத்தினை தடைசெய்தலானது திருக்குர்ஆனின் சூரா IV:3 இற்கு முரணானது என்கின்றனர். அவ்வகையில் Abdul Rahuman I. Doi இன் வாதமாக இஸ்லாமிய சட்டவியலானது எவ்வித திருத்தமும் இன்றி ஆயிரத்து நானூறு வருடங்கள் வாழ்ந்துவிட்டது எதிர்காலத்தில் அல்லா(Allah) தொடர்ந்து வாழவைப்பார் என்கிறார்.[xxxiii]

பொதுச்சட்டம்[xxxiv] மற்றும் கண்டியச் சட்டம்[xxxv] என்பவற்றின் கீழ் திறத்தவர்கள் திருமணப்பதிவாளர் முன்னிலையில் கையெழுத்து இடுவதன் மூலம் தமது சம்மதத்தை வெளிப்படுத்த வேண்டும். முஸ்லிம் சட்டத்தின் கீழ் பாதுகாவலரின்(Wali) சம்மதம் இன்றியமையாத தேவைப்பாடாகக் கொள்ளப்படுகிறது. வலி மணப்பெண் சார்பாக அவளின் சம்மத்தையும் தனது சம்மதத்தையும் தெரிவிக்க வேண்டும்.[xxxvi] சம்மதம் வழங்கப்படாவிட்டால் வெறிதான(Void) திருமணமாகக் கருதப்படும். வலி நியாயமற்ற காரணங்களுக்கமைய சம்மதம் வழங்க மறுப்பாராயின் அல்லது பாதுகாவலர்கள் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் காதியின் சம்மதம் பெறப்படவேண்டும்.[xxxvii] முஸ்லிம் சட்டத்தில் திருமணப்பதிவில் மணப்பெண் சார்பாக வலியே கையெழுத்து இடுவார்.

பொதுச்சட்டப்படி திருமணங்கள் கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு கிடையாது. Gracia Catherine V. Wijegunawardena[xxxviii] வழக்கில் வழக்காற்றுத் திருமணமொன்று நடைபெற்றால் அது பதிவுசெய்யப்பட்ட திருமணத்திற்கு மாற்றீடாக ஏற்றுக்கொள்ளப்படலாம் எனப்பட்டது. கண்டியச் சட்டப்படி திருமணப்பதிவு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்படாத திருமணங்கள் வலிதற்றவையாகும்.[xxxix] Podinona V. Herathhamy[xl] வழக்கில் கண்டியச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாத வழக்காற்றுத் திருமணங்கள் வலிதுடைமையைப் பெறாது எனப்பட்டது.

முஸ்லீம் சட்டத்தில் பதிவுசெய்யப்படாத வழக்காற்றுத் திருமணங்களும் வலிதுடைமை பெறுகிறது. பதிவுசெய்யப்படாத திருமணங்களை பாதுகாக்கும் முகமாக பெறுப்புடைமையை தனியார் மீது சுமத்துகிறது. இதன்படி திருமணங்கள் பதிவுசெய்யப்படாவிடின் தண்டப்பணம் பெறப்படும்.[xli] தண்டப்பணத்தொகையின் அளவு மற்றும் பலதார மணத்தை அங்கீகரித்துள்ளமையினால் முஸ்லிம் ஆண் பல திருமணங்களை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றமை என்பன முஸ்லிம்

விவாகப்பதிவு தொடர்பில் சிக்கல்நிலையினை தோற்றிவித்துள்ளது. கல்வியறிவு வீதம் உயர்நிலையில் காணப்படும் இலங்கை போன்றதொரு நாட்டில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மூலம் எதிர்வரும் காலங்களில் விவாகப்பதிவுடன் கூடிய விவாகங்கள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது காலத்தின் தேவையாகும்.

முஸ்லீம் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு மஹர்(Mahr) முக்கிய அம்சமாகும். மஹர் என்பது மணமகனால் மணமகளுக்கு திருமணத்தின் நிமிர்த்தம் வழங்கப்படும் பரிசுத்தொகையாகும். எனினும் மஹர் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக ஒரு திருமணம் வலிதற்றதாக்கப்படமுடியாது. பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் திறத்தவர்கள் மஹரின் அளவை நிர்ணயிக்கமுடியும். [xlii] மணப்பெண்ணிற்கான முறையான மஹரானது அவளின் வயது, அழகு, அதிஸ்டம், புரிந்துணர்வு, நல்லொழுக்கம் மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும்.[xliii]

முஸ்லிம் பெண்ணொருவர் விவாகரத்து அல்லது கணவன் இறந்த பின் இப்தா(Iddat) காலத்தின் போது திருமணம் செய்தால் அது முறையற்ற திருமணமாகக் கொள்ளப்படும். இக்காலத்தில் செய்யப்படும் திருமணங்கள் பதிவுசெய்யப்படமுடியாது.[xliv] பொதுவாக இது மூன்று மாதங்களாகும். விதவை மனைவியை பொறுத்தவரையில் நான்கு மாதமும் பத்து நாட்களுமாகும். ஒரு பெண் கணவன் இறந்த பின் அல்லது விவாகரத்தின் பின் கருத்தரித்திருப்பின் அக்குழந்தையின் தந்தமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. Thahir v Mohamad Gani Noor[xlv] வழக்கில் இப்தா காலத்தை மேற்கொள்ளும் போது இடம்பெறும் திருமணம் சட்டரீதியானதல்ல எனப்பட்டது.

**முடிவுரை**

பல்லின கலாசார மக்கள் வாழும் இலங்கை போன்றதொரு நாட்டில் அனைத்து சமூகத்தினதும் கலாசாரப் பெறுமானங்கள் உள்வாங்கப்பட்டு திருமணம் தொடர்பான சட்டவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். முஸ்லிம் சட்டத்தின் திருமணம் தொடர்பான பல ஏற்பாடுகள் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு விதிவிலக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த திருமண வயது சட்டத்தினால் குறித்துரைக்கப்படாமையானது சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமை மீறலுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது எனலாம். மேலும் இச்சட்டத்தில் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது தொடர்பான ஏற்பாடுகள் இன்மையாலும் திருமணப்பதிவில் மணப்பெண்ணிற்கு சம்மதத்தை வெளிப்படுத்த இயலாமையினாலும் வலுக்கட்டாய பாலிய விவாகங்களுக்கும் சிறுவர் உரிமை மீறல்களுக்கும் இது வாய்ப்பாக அமையலாம்.

கல்வியறிவு வீதம் உயர்நிலையில் இருக்கும் இலங்கை போன்றதொரு நாட்டில் பெண்கள் திருமணத்திற்கான சம்மதத்தினை வழங்கக்கூடியவாறு சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் திருமணத்திற்கான சம்மதம், ஆகக் குறைந்த வயதெல்லை மற்றும் திருமணப்பதிவு உடன்படிக்கையானது “இரண்டு திறத்தவர்களின் முழுமையான சுதந்திரமான சம்மதமின்றி எந்தவொரு திருமணமும் சட்ட ரீதியாக ஏற்படுத்த முடியாது” என்கிறது.[xlvi] இன்றைய நிலையில் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் கல்வியறிவு வீதமானது உயர்நிலையில் உள்ளது. சட்டம், வைத்தியம், பொறியியல், கணக்கியல், விஞ்ஞானம் என எல்லாத்துறைகளிலும் தமது சாதனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எனவே அத்தகையர்களின் உரிமைகளை பாதுகாக்க உரிய ஏற்பாடுகள் சட்டத்தினால் செய்யப்படவேண்டும்.

பெண்களுக்கெதிரான அனைத்து பேதங்காட்டல்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச பட்டயமானது(CEDAW) பெண்களின் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதானது சட்டத்தினால் குறித்துரைக்கப்படவேண்டும் என்கிறது.[xlvii] இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை பெண்களின் திருமணத்திற்கான அதிகுறைந்த வயதெல்லையை உறுதிப்படுத்தும் சட்டவாக்கங்களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (CRC) பதினெட்டு வயதிற்குட்பட்ட அனைவரையும் சிறுவர்களாகக் குறிப்பிடுகிறது.[xlviii] இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை சிறுவர்களின் உரிமைகளை மீறுவதான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஒப்பீட்டளவில் இலங்கைச் சட்டத்தல் திருக்குர்ஆனின் விதியானது அதன் தூய்மைத்தன்மையுடன் அவ்வாறே உள்வாங்கப்பட்டுள்ளது எனலாம். திருக்குர்ஆனின் தூய்மைத்தன்மையை பேணும் அதேவேளை முன்னைய மனைவியரின் உரிமைகளும் சட்டத்தினால் பாதுகாக்கப்படவேண்டும். எனவே காதியரிடம் பின்னரான திருமணத்திற்கான விண்ணப்பங்கள் செய்யப்படுகின்றபோது முன்னைய மனைவியரின் பராமரிப்பு மற்றும் அதுதொடர்பான பிரச்சினைகளை விசாரணைசெய்வதற்கான தத்துவம் சட்டத்தினால் வழங்கப்படவேண்டும். சட்டமானது ஒரு திறத்தவருக்கு சலுகைகளை வழங்குவதாகவும், மற்றத்திறத்தவரின் உரிமைகளை பறிப்பதாகவும் அமையக்கூடாது. எனவே இவ்விடயத்தில் இரு திறத்தவர்களின் அக்கறை தொடர்பில் சமத்துவம் எய்தப்படவேண்டும்.

இவ்வகையில் முஸ்லிம் சட்டமானது இலங்கையின் திருமணங்கள் தொடர்பான சட்டங்களில் தனக்கென தனியானதொரு இடத்தினைக் கொண்டிருப்பதுடன் கால மாற்றத்திற்கேற்ப சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது. காலத்திற்கு முற்பட்ட சட்டங்களில், காலம் மாற, சமூகசிந்தனைகள் மாற ஒவ்வாததன்மை ஏற்படும் ஆகையால் சமூகசிந்தனை ஓட்டத்திற்கேற்ப சட்டங்கள் மாற்றப்பட வேண்டும். எனவே இன்றைய காலத்திற்கு உகந்த வகையில் திருமணம் தொடர்பான முஸ்லிம் சட்டத்தின் சில ஏற்பாடுகள் மீள்பரிசீலிக்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அதுதொடர்பில் உரிய அதிகாரிகள் ஆவண செய்யவேண்டும்.

---

[1] Qureshi M.A, (1992), “Muslim Law of Marriage, Divorce and Maintenance”, 1st Edition, at p 55
[1] Saleen Marsoof, (2006), “The Muslim Law of Marriage Applicable In Sri Lanka”, Law College Law Review, at p 3
[1] Affefudeen v. Periatamby (1912) 14NLR 295 at p.300 per Middleton J.
[1] [ 2002 2 SLR 302]
[1] Asaf.A.A.Fyzee, (1992), “Outlines of Muhammadan Law”, 4th Edition , Oxford University Press, at p 93
[1] (1928) 30 Bom, LR. 1346, 1351(P.C)
[1] Section 23, 47(j) of Muslim Marriage and Divorce Act No 13 of 1951
[1] Supra 5 at p 94
[1] [2 MMDLR 53]
[1] Section 363 of Penal Code in Sri Lanka
[1] Ibid section 364A
[1] Supra 5 at p. 106
[1] Supra 7, Section 80(i)
[1] Supra 5 at p 107
[1] Section 18 of Marriage Registration Ordinance, No 19 of 1907
[1] Section 6 of Kandyan Marriage and Divorce Act 1952

[1] Holy Quran Sura Nisaa IV.3
[1] 67 N.L.R. 25
[1] [1998 1 SLR 185]
[1] The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978, Article 10
[1] Section 18 of Moroccan Code of Personal Status of 1958
[1] Section 6 of Muslim Family Law Ordinance of 1961
[1] M.S.Jaldeen, (1990), "The Muslim Law of Marriage Divorce and Maintenance in Sri Lanka", 1st edition, Federation of Assemblies of Muslim Youth in Sri Lanka, at p 21

[1] Supra 15, Section - 34(4), 35
[1] Supra 15, Section - 22(2)(3), 23(1)(C)]
[1] Supra 7, section - 25(1)
[1] Supra 7, section – 47 (2),(3)
[1] [ 1986 2 SLR 190]
[1] supra 16 , section – 3(1)(b)
[1] [1985 2 SLR 237]
[1] Supra 7, section - 17
[1] Supra 17, Sura Nisaa IV.4
[1] Waffa V. Sithy Hafeela [4 MMDLR 132]

[1] Supra 7, Section 22
[1] [4 MMDLR 48]
[1] Convention on Consent to Marriage, Minimum Age For Marriage and Registration of Marriages - 1964, Article 1

[1] Convention on the Elimination of All Forms of Discrimination Against Woman [CEDAW] – 1979, Article 16

[1] Convention of Rights of Children – 1989, Article 2

---

[xi] Qureshi M.A, (1992), "Muslim Law of Marriage, Divorce and Maintenance", 1st Edition, at p 55
[xii] Saleen Marsoof, (2006), "The Muslim Law of Marriage Applicable In Sri Lanka", Law College Law Review, at p 3
[xiii] Affefudeen v. Periatamby (1912) 14NLR 295 at p.300 per Middleton J.
[xiv] [ 2002 2 SLR 302]
[xv] Asaf.A.A.Fyzee, (1992), "Outlines of Muhammadan Law", 4th Edition , Oxford University Press, at p 93
[xvi] (1928) 30 Bom, LR. 1346, 1351(P.C)
[xvii] Section 23, 47(j) of Muslim Marriage and Divorce Act No 13 of 1951
[xviii] Supra 5 at p 94
[xix] [2 MMDLR 53]
[xx] Section 363 of Penal Code in Sri Lanka
[xxi] Ibid section 364A
[xxii] Supra 5 at p. 106
[xxiii] Supra 7, Section 80(i)
[xxiv] Supra 5 at p 107
[xxv] Section 18 of Marriage Registration Ordinance, No 19 of 1907
[xxvi] Section 6 of Kandyan Marriage and Divorce Act 1952

[xxvii] Holy Quran Sura Nisaa IV.3
[xxviii] 67 N.L.R. 25
[xxix] [1998 1 SLR 185]
[xxx] The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978, Article 10
[xxxi] Section 18 of Moroccan Code of Personal Status of 1958
[xxxii] Section 6 of Muslim Family Law Ordinance of 1961
[xxxiii] M.S.Jaldeen, (1990), "The Muslim Law of Marriage Divorce and Maintenance in Sri Lanka", 1st edition, Federation of Assemblies of Muslim Youth in Sri Lanka, at p 21

[xxxiv] Supra 15, Section - 34(4), 35
[xxxv] Supra 15, Section - 22(2)(3), 23(1)(C)]
[xxxvi] Supra 7, section - 25(1)
[xxxvii] Supra 7, section – 47 (2),(3)
[xxxviii] [ 1986 2 SLR 190]
[xxxix] supra 16 , section – 3(1)(b)
[xl] [1985 2 SLR 237]
[xli] Supra 7, section - 17
[xlii] Supra 17, Sura Nisaa IV.4
[xliii] Waffa V. Sithy Hafeela [4 MMDLR 132]

[xliv] Supra 7, Section 22
[xlv] [4 MMDLR 48]
[xlvi] Convention on Consent to Marriage, Minimum Age For Marriage and Registration of Marriages - 1964, Article 1

[xlvii] Convention on the Elimination of All Forms of Discrimination Against Woman [CEDAW] – 1979, Article 16

[xlviii] Convention of Rights of Children – 1989, Article 2